நகராட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர்வழங்கல்துறை

திருவாரூர் நகராட்சி ஆணையர் (மு.கூ.பொ)அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.சி.ந.சியாமளா

ந.க.எண்421 /2025/எப்1 **நாள்.09.06.2025**

பொருள்	மனைப்பிரிவு ஒப்புதல் – திருவாரூர் நகராட்சி – வார்டு 2, பிளாக் 41, நகரளவு எண்கள். 2412/35, 2446/2A, 2446/2B, 2446/9ல் 5863.27 சதுர மீட்டர் பரப்பளவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டது – மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.
பார்வை	1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களின் கடித Roc No.40776 /2025 /TVR, TCP நாள் 06.03.2025, மனைப்பிரிவு வரைபட அனுமதி எண். ம.வ/மா.ந.ஊ.அ (TVR) SWP எண். 09/2025 , நாள்.06/03/2025. 2. நகர்மன்ற தீர்மான எண். 881 நாள்.09.06.2025.

******

உத்தரவு:

திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 2, பிளாக் 41, நகரளவு எண்கள். 2412/35, 2446/2A, 2446/2B, 2446/9 ல் 5863.27 சதுர மீட்டர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு (மனை எண் 1 முதல் 22 வரை) பார்வை 1ல் கண்டுள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களின் உத்தரவில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன்படியும் மற்றும் பார்வை 2ல் கண்டுள்ள திருவாரூர் நகரமன்ற தீர்மானத்தின்படியும் பார்வை 1–ல் கண்டுள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்படுத்தி மனைப்பிரிவிற்கு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

1.மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகளை ஒவ்வொரு மனைகள் விற்பனை பத்திரத்திலும் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

2.உதவி இயக்குநர் ஊரமைப்புத்துறை மற்றும் நகராட்சி பொறியாளரால் வழங்கப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

இணைப்பு: உதவி இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் அனுமதி உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகள் பொருந்தும்.

ஆணையர்
திருவாரூர் நகராட்சி.

பெறுநர்–திரு.எஸ்.அகோரசிவன் மற்றும் ஆர்.சத்தியப்பிரியா,94/9, தெற்குவீதி, திருவாரூர்.

நகல் 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குனர், திருவாரூர்.
2. சார்பதிவாளர், திருவாரூர்.
3. நகராட்சி பொறியாளர், திருவாரூர்.
4. வருவாய் ஆய்வாளர், காலி மனை வரி விதிப்பு செய்திட.
5. கணினி உதவி திட்ட அமைப்பாளர், திருவாரூர் (சொத்து பதிவேட்டில் கூடுதல் பதிவேற்றம் செய்திட)